Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 24 2025

திங்கட்கிழமை 24, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 165 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## விலை எகிறியது

வாகன இறக்குமதி மீண்டும் தொடங்கப்பட்ட பிறகு பெறப்படும் முதல் தொகுதி வாகனங்களில், புத்தம் புதிய மோட்டார் சைக்கிளின் விலை கிட்டத்தட்ட ரூ.1 மில்லியன் (10 இலட்சம் ரூபாய்) ஆகும்.

டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனம் தங்கள் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் புத்தம் புதிய பல்சர் N160 மோட்டார் சைக்கிளின் விலை ரூ.934,950 என்று அறிவித்துள்ளது.

புத்தம் புதிய டிஸ்கவர் 125 DRL மோட்டார் சைக்கிளின் விலை ரூ. 731,950 மற்றும் புத்தம் புதிய CT 100 ES மோட்டார் சைக்கிளின் விலை ரூ.637,950 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




## மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை

நாட்டின் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலையை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக சித்திரவதை, தன்னிச்சையான கைது, தடுப்புக் காவல், துன்புறுத்தல் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்காமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த ஆணைக்குழு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பொலிஸ் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு



பொலிஸ் பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பை வழங்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் (NPC) பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன் இவ்விடயம், தேசிய அரசியலமைப்பு சபைக்கு (CC) கைமாற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எதிரணியினருக்கு சந்தர்ப்பம்

பாராளுமன்ற குழுக்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் சனிக்கிழமை (22) அன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மலசலகூடத்தில் சிசுவை பிரசவித்து யன்னலில் வீசிய மாணவி சிக்கினார்

ரீ.எல்.ஜவ்பர்கான், கனகராசா சரவணன்

18 வயதுடைய மாணவி ஒருவர் மலசலகூடத்தில் சிசுவை பிரசவித்து, யன்னல் வழியாக வீசியுள்ளார். அவ்வாறு வீசிய சிசு, காப்பாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் சம்பவம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

### “பாதாள உலக குழுக்களுக்கு எதிராக

## கடுமையாக சட்டம் அமுலாகும்”



இலங்கை அரசாங்கம் நாட்டில் குற்றங்களை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடும் அதே வேளையில், சில பாதாள உலகக் குழுக்கள் அதற்கு எதிராகச் செயல்பட்டு வருகின்றன, மேலும் சில குழுக்கள் விசாரணைகளை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றன, மேலும் அவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ்

தொடர்ச்சி P2

# “நாட்டில் பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை”



நாட்டில் பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு ஞாயிற்றுக்கிழமை (23) அன்று விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கூறியுள்ளதாவது,

குற்ற கும்பல்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களினாலேயே சமீபத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளன.

அவற்றை தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கும் முயற்சி இடம்பெற்றுவருவது தொடர்பாகவும் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## தலதா மாளிகைக்கு சென்று ஆசி பெற்றார் ஜனாதிபதி




ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஞாயிற்றுக்கிழமை (23) அன்று கண்டி ஸ்ரீதலதா மாளிகைக்கு சென்றுள்ளார். அவரை தலதா மாளிகையின் தியவதன நிலமே நிலங்க தேல சம்பிரதாயபூர்வமாக வரவேற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மகா சங்கத்தினர் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசீர்வாதம் வழங்கினர், அவர் புனித தந்ததாமரைக்கு முன்பாக மத அனுஷ்டானங்களில் பங்கேற்றுள்ளார். வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகையில் வைக்கப்பட்டுள்ள சிறப்பு பார்வையாளர் புத்தகத்திலும் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார்.

### அரசாங்கம் மீதான அங்கீகாரத்தின் மதிப்பீடு

## “பெப்ரவரியில் 62 வீதமாக உச்ச நிலையை எட்டியுள்ளது”

வெரிட்டே ரிசர்ச்சின் கேலப் பாணியிலான (Gallup style) சமீபத்திய ஆய்வு சுற்றின் ‘தேசத்தின்மனநிலை’ கருத்துக்கணிப் பின்படி, 2024 ஜூலை மாதத்தில் 24 சத வீதமாக இருந்த அரசு மீதான மக்கள் அங்கீகாரம் 2025 பெப்ரவரியில்




தொடர்ச்சி P2

## தமிழக மீனவர்கள் 32 பேர் 5 விசை படகுகளுடன் கைது

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த 32 மீனவர்களையும், அவர்களின் 5 விசைப்படகுகளையும் மீட்க மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று வாசன் தெரிவித்துள்ளார்.


தொடர்ச்சி P2

## Clean Sri Lanka பாடசாலை வேலைத் திட்டம் ஆரம்பம்

அரசாங்கத்தின் முதன்மை வேலைத்திட்டமாக செயல்படுத்தப்படும் “Clean Sri Lanka வேலைத்திட்டம்” பாடசாலை கட்டமைப்புக்கு எடுத்துச் செல்லும் வகையில், ஆயிரம் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டம், நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 பாடசாலைகளில் வியாழக்கிழமை(20) ஆரம்பிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2

## “இப்படிதான் சம்பளம் அதிகரிக்கும்”



அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, அரச சேவையில் கனிஷ்ட மட்டத்தில் ஆகக் குறைந்த சம்பளம் 5,975 ரூபாவினால் அதிகரிப்பதாக தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ‘போப் பிரான்சிஸ்சின் உடல் நிலை கவலைக்கிடம்’

## தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக தகவல்



கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப்பின் உடல் நிலை மோசம் அடைந்துள்ளதாகவும், அவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வத்திக்கான் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் (88 வயது),

தொடர்ச்சி P2

### விசேட தேவையுடைய பிள்ளைகளின்

## உயர் கல்விக்கு விசேட கவனம்



கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளி சமூகத்தின் கல்வியை மேம்படுத்துவதற்காக மாற்றுத்திறனாளி சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்புடைய குழுவினருடனான சந்திப்பொன்று சனிக்கிழமை (22) அன்று பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச விதிமுறைகளை கவனத்திற்கொண்டு விசேசட தேவைகள் உள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்மொழிவை அவர்கள் முன்வைத்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “பெப்ரவரியில் 62 வீதமாக...

62 சதவீதம் என்ற உயர் நிலையை அடைந்துள்ளது. தேர்தலின் பின்னர் அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு காணப்படும் அங்கீகாரம் அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் முதல் முறையாக மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் (55%) இலங்கை பொருளாதாரமானது ‘மேம்பட்டுள்ளதாக’சிந் திக்கின்றனர். எனினும் மக்கள் தொகையில் 47 சதவீதமானவர்கள் நாட்டின் பொருளாதார நிலைமையானது தற்போதும் ‘மோசமான நிலைமையிலேயே’ காணப்படுவதாக உணர்கின்றனர். இது கடந்த 2024 ஜுலை மாதத்தில் பதிவான 71 சதவீதத்தைவிடக்குறைவாகும்.

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது 2024 ஜுலை மாதத்திலிருந்து 2025 பெப்ரவரி வரையான காலப்பகுதியில், அங்கீகாரம் வழங்காத மக்கள் தொகை 60 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாகக் (44 புள்ளிகள் குறைவு) குறைவடைந்துள்ளது. மேலும் இலங்கையின் பொருளாதாரமானது வீழ்ச்சிப்போக்கினை கொண்டுள்ளது என்ற நிலைப்பாட்டினை கொண்ட மக்களின் தொகையானது 65 சத வீதத்திலிருந்து 14 சத வீதமாகக் (51 புள்ளிகள் குறைவு) குறைவடைந்துள்ளது. அரசாங்கம் மீதான அங்கீகாரம்/ அங்கீகரிப்பவர்கள் 62 % அங்கீகரிக்காதவர்கள் 16% “தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா இல்லையா?” என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 62% பேர் அதை ‘அங்கீகரிப்பதாகக்’ கூறினர், இது முன்னைய 24 சதவீதத்திலும் பார்க்க இரண்டு மடங்கிற்கும் அதிகம். பதிலளித்தவர்களில் 16% பேர் மாத்திரம் இதை ‘அங்கீகரிக்கமறுத்தனர்’. இது முன்னைய ஆய்வில் 60 சதவீதமாக இருந்தது. பொருளாதாரம் மீதான கண்ணோட்டம் 55% ‘முன்னேற்றமடைகிறது’ 14% ‘மோசமான நிலைமைக்கு செல்கிறது’ “ஒட்டு மொத்தமாக இலங்கையின் பொருளாதாரமானது முன்னேற்றமடைகிறதா அல்லது மோசமான நிலைக்கு செல்கிறதா?” என்ற கேள்விக்கு பதிலளித்த மக்கள் தொகையில் 55 சதவீதமானோர் ‘முன்னேற்றமடைகிறதாகப் ’பதிலளித்துள்ளனர். கடந்த 2024ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்த கணிப்பீடானது 30 சதவீத மாகப் பதிவாகியிருந்தது. இலங்கையின் பொருளாதாரமானது ‘மோசமான நிலைக்குச் செல்வதாக’ 14% பேர் மாத்திரமே கூறியுள்ளனர். இது முன்னர் 65 சதவீதமாக இருந்தது. பொருளாதார நிலவரம்- நல்லநிலை அல்லது சிறந்தநிலை 35% மோசமானநிலை 47% இலங்கையின் பொருளாதார நிலவரமானது ‘நல்லநிலை’ அல்லது ‘சிறந்தநிலை’ அல்லது ‘ மோசமான நிலையினைக்’ கொண்டுள்ளதா என மதிப்பாய்வு செய்யுமாறு கேட்டுக்கொண்ட போது 35 சதவீதமானோர், பொருளாதாரமானது ‘நல்லநிலை’ அல்லது ‘சிறந்தநிலைமையை’ கொண்டுள்ளது என தரப்படுத்தியுள்ளனர். கடந்த ஜுலை மாதம் 2024 ஆம் ஆண்டு 28% ஆகக்காணப்பட்ட நிலையில் தற்போது அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். இதனிடையே, இலங்கையின் பொருளாதாரமானது வீழ்ச்சியான போக்கினையே கொண்டுள்ளது எனவும் ‘மோசமான நிலையில்’ காணப்படுவதாகவும் 47% பேர் தரப்படுத்தியுள்ளனர்.

# தமிழக மீனவர்கள் 32 பேர் 5 விசை படகுகளுடன் கைது

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை (23) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது,

“தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக மீனவர்களைக் கைது செய்யும் இலங்கை கடற்படையினரை மத்திய அரசு கண்டிக்க வேண்டும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக, இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது வாடிக்கையாகிவிட்டது. இது வேதனைக்குரியது. அந்த வகையில், இப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த மேலும் 32 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள், மீன்பிடி துறைமுகத்திலிருந்து சென்று வழக்கம்போல் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக 32 பேரையும் கைது செய்துள்ளனர்.

மேலும் அவர்கள் பயன்படுத்திய 5 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். இதனால் ராமேஸ்வரம் பகுதி மீனவக் குடும்பங்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். காரணம் வருமானம் ஈட்ட முடியாமல், வாழ்வாதாரத்தை இழக்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

குறிப்பாக அண்மையில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். அது பெரும் பிரச்சினையாக வெடித்தது. அதனைக் கண்டித்து தமிழக மீனவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில், மேலும் 32 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இதற்கு காரணம் இலங்கை அரசின் முறையற்ற நடவடிக்கைகள் தான்.

எனவே மத்திய அரசு, இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 32 பேரை விடுவிக்கவும், அவர்களின் 5 விசைப்படகுகளை ஒப்படைக்கவும் வலியுறுத்த வேண்டும்.

தமிழக அரசும் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலைப் பாதுகாக்கும் விதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் மத்திய அரசு, தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படக்கூடாது என்பதற்கு ஏற்ப இலங்கை அரசுடன் கண்டிப்போடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக தகவல்

உடல் நலக்குறைவு காரணமாக ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைக்காக 14-ம் திகதி அனுமதிக்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவருக்கு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை (20) மாலை அவரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், அவரது இதயம் நன்றாக செயல்படுவதாகவும் வத்திக்கான் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை (21) காலை வெளியான தகவலின்படி, ‘இரவு அவர் நன்றாக ஓய்வெடுத்தார். இன்று காலை போப் பிரான்சிஸ் எழுந்து காலை உணவை உட்கொண்டார்’ என கூறப்பட்டது.

இந்நிலையில், தற்போது, போப்பின் உடல் நிலை மோசம் அடைந்துள்ளதாகவும், ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வத்திக்கான் நிர்வாகம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவருக்கு ரத்தத்தில் ஒரு வகை ரத்த அணுக்கள் குறைவாக இருந்ததால் ரத்தம் செலுத்தப்பட்டுள்ளது. போப் பிரான்சிஸ் சுய நினைவுடன் தான் இருக்கிறார் என்றும், எனினும் மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதால், ஒக்சிஜன் அளிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

போப் பிரான்சிஸ் உடல் நலம் பெற உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர். போப் பிரான்சிஸ் உடல் நலமற்று இருப்பது சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.

# உயர் கல்விக்கு விசேட...

மேலும், விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களுக்கான உயர்கல்வி நிலைகளை அறிமுகம் செய்தல் போன்ற பல விடயங்கள் குறித்து இந்த முன்மொழிவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மதியிருக்கம் (ஒட்டிசம்) நோயால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்வியை உயர்த்தவும், அநாதை பிள்ளைகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும் தற்போதைய அரசு 2025 வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை அவர்கள் பாராட்டினர். இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர், விசேட தேவையுடையவர்கள் பொதுச் சமூகத்தில் இயல்பான வாழ்க்கையை முன்னெடுக்க தேவையான சமூக அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். Clean sri lanka திட்டத்தினூடாகவும் நாம் அதனை செய்ய எதிர்பார்க்கின்றோம்.

எமது நாட்டில் பல கொள்கைகள் இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதுதான் பிரச்சினை. நாம் பார்ப்பது போல், கொள்கைகளை செயற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்பது இங்கு மிகவும் முக்கிய விடயம். அதுதான் 2025 வரவு- செலவுத்திட்டத்தில் பல்வேறு பணிகளுக்கு குறிப்பாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ், விசேட தேவையுடைய பிள்ளைகளின் உயர் கல்வியை ஒரு தலைப்பாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கிறோம். அதற்கு தேவையானவர்களை நியமித்துள்ளோம்.

கல்வியில் ஒரு பாரிய மாற்றத்திற்கு நாம் இப்போது தயாராகி வருகிறோம் என்று பிரதமர் கூறினார்.

# கடுமையாக சட்டம் அமுலாகும்”

மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் சனிக்கிழமை (22) அன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார். இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்..

கடந்த காலத்தில் அரசியல் ஆதரவுடன் பாதாள உலகம் வளர்க்கப்பட்டதன் விளைவுகளை இன்று நாம் காண்கிறோம். ஆனால் இன்று அதற்கு எந்த அரசியல் ஆதரவும் இல்லை. மேலும், இன்று இதுபோன்ற பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக சட்டம் விரைவாக செயல்படுத்தப்படுகிறது. சட்டவிரோத துப்பாக்கிகள் குறித்து பாதுகாப்பு அமைச்சு தற்போது விசாரணையைத் ஆரம்பித்துள்ளது. இந்த அரசாங்கத்தின் கீழ் எந்தவொரு சட்டவிரோத ஆயுத விற்பனையும் நடைபெறாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

சட்டவிரோத துப்பாக்கிகள் தொடர்பான விசாரனைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்;டது. இந்த விசாரனைகள் முப்படையினரால் மேற்கொள்ளப்படுகிறது. பலர் சட்டவிரோத துப்பாக்கிகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர். இதுவரை 48 துப்பாக்கிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த துப்பாக்கிகளில் பெரும்பாலானவை கடந்த காலத்தில் வழங்கப்பட்டவை. முமலும், இந்த அரசாங்கத்தின் கீழ் சட்டவிரோத ஆயுத வியாபாரம் இடம்பெறாது. பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில், புலனாய்வுத் தகவல்கள் மூலம் இந்த விடயம் குறித்து தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# Clean Sri Lanka பாடசாலை வேலைத் திட்டம் ஆரம்பம்

எமது பாடசாலையை Clean செய்வோம்”நாட்டைக் கட்டியெழுப்பும் தலைமுறையின் முன்னோடியாக நாம் இருப்போம் “ என்ற கருப்பொருளின் கீழ் செயல்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம், குறித்த பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட பாடசாலை சமூகத்தின் தலைமையில் செயல்படுத்தப்படுகிறது.

இந்த நோக்கத்திற்காக தேவையான மனிதவளத்தையும் தொழில்நுட்ப அறிவையும் முப்படைகளின் உறுப்பினர்கள் வழங்குகிறார்கள்.

அதன்படி, பாடசாலைகளில் உடைந்த மேசைகள், நாற்காலிகள், உபகரணங்கள், மின் கட்டமைப்புகள் மற்றும் நீர் குழாய் கட்டமைப்புகளின் அத்தியாவசிய பழுதுபார்ப்புகளும் செய்யப்படுவதோடு பாடசாலை தூய்மைப்படுத்தப்படும். இதன் முதல் கட்டமாக, இராணுவ வீரர்களின் பங்களிப்புடன் 100 பாடசாலைகளிலும், கடற்படையின் பங்களிப்புடன் 50 பாடசாலைகளிலும், விமானப்படையின் பங்களிப்புடன் 50 பாடசாலைகளிலும் இந்த வேலைத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்த மார்ச் மாத இறுதிக்குள் 1,000 பாடசாலைகளிலும் இத்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த திட்டத்தில் பாடசாலைகள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களை பங்கேற்கச் செய்வது சிறப்பம்சமாகும். மேலும் பாடசாலையை சுத்தமாக வைத்திருக்கும் அதே வேளை, தொடர்ந்து பராமரிக்க தேவையான பயிற்சி அவர்களுக்கு வழங்கப்படும்.

இந்த வேலைத்திட்டம் நேற்று (20) மே / கொ/ மஹவத்த புனித அந்தோணியார் சிங்களக் கல்லூரியில் இலங்கை விமானப்படை வீரர்களின் பங்கேற்புடன் தொடங்கப்பட்டதோடு, இதற்கு இணையாக நாட்டின் ஏனைய 199 பாடசாலைகளில், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதிநிதிகளின் தலைமையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

# “இப்படிதான் சம்பளம் அதிகரிக்கும்”

அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு விவாதத்தில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர்; தற்போது அரசாங்க சேவையில் கொடுப்பனவுகள் இரண்டு வழங்கப்படுகின்றன. ஒன்று வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 17,800 ரூபாவும் மேலும் கொடுப்பனவுகள் இரண்டு கொடுப்பனவுகள் கடந்த காலங்களில் அதிகரிக்கப்பட்ட 7,500 ரூபாவும் காணப்படுகிறது.

அது 5,000 ரூபாய் மற்றும் 2,500 ரூபாய்கள் ஆகும். இந்த 7500 ரூபாய் என்பது 15,750 ரூபாயினுள் சம்பள அதிகரிப்பிற்கு அதிகரிக்கப்படும். அடிப்படைச் சம்பளம் 15,750 ரூபாவினால் அதிகரிக்கும் போது அங்கு காணப்படும் 7,500 ரூபாய் புதிதாக மீதப்படும் பகுதியாகும். ஹர்ஷதி செல்வா குறிப்பிட்ட பி எல் (PL) இந்த சம்பளம் மாத்திரம் ஏனைய சம்பளம் பற்றி கதைக்கவில்லை.

அதனால் இந்த வருடத்தில் 5000 ரூபாவில் மீதப்படும் 3,250 ரூபாவின் 975 ரூபாவும் அதிகரிக்கப்படும். அதன்போது, அரசாங்க சேவையில் பி எல் (PL)1 தரத்தின் குறைந்த சம்பளம் 5,975 ரூபாவினால் அதிகரிக்கும்.

அதேபோல, அரசாங்க சேவையில் ஒவ்வொருவருக்கும் வருடாந்த சம்பள அதிகரிப்பு 80% வீதத்தினால் உயரும். குறைந்தது 250 ரூபாய் வருடாந்த சம்பள உயர்வு 450 ரூபாய் வரை 80% வீதத்தினால் அதிகரிக்கும்.

இதன்போது பிரதி அமைச்சர் அபிவிருத்தி உத்தியோத்தர், ஆசிரியர் சேவை, அதிபர் ஆகிய சேவைகள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் MN / உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்புத் தொடர்பாகவும் தெளிவு படுத்தினார்.

கிராம உத்தியோகத்தர் சேவையின் தற்போதைய சம்பளம் GN-1- 28,940 மூன்று ஆண்டுகளுக்குள் 56,630 ரூபாவாக அதிகரிக்கும். அதுபோல் மறக்க வேண்டாம் 40,000 ரூபாய் அடிப்படை சம்பளத்திற்கு 17,500 எனப்படும் வாழ்க்கைச் செலவுப்படி அதே விதத்திலேயே சேர்க்கப்படும்.

அத்துடன், அவர்களின் மொத்த அதிகரிப்பு 21,690 ரூபாய் அதிலிருந்து 17,500 ரூபாய்களை கழித்தால் அவர்களது நிகர சம்பள அதிகரிப்பு 14,190 ரூபாவாகும். அதாவது இன்றைய நாள் கிராம உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளம் 9,257 ரூபாவினால் அதிகரிக்கும்.

தற்போது மருத்துவ சேவையில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களின் (MO) சம்பளம் 54,250 ரூபாய். அது 91,750 ரூபாய் வரை அடிப்படைச் சம்பளத்தில் அதிகரிக்கப்படும். அதன்போது அவர்களது மொத்த சம்பள அதிகரிப்பு 37,460 ரூபாவில் 7,500 ரூபாய்களை கழித்தால் 29,960 ரூபாவின் 30% சதவீதம் வழங்கப்படும்.

மொத்த அதிகரிப்பில் 7,500 ரூபாவை கழித்தால் மீதமாகும் 30 சதவீதம் இந்த வருடத்தில் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து சகல அரச ஊழியர்களுக்கும் கிடைக்கும். அதன்போது வைத்தியர் ஒருவரின் சம்பளம் 13,988 ரூபாவினால் அதிகரிக்கும். தற்போது மணித்தியாலத்திற்கு 687 ரூபாய் வழங்கப்படுகின்றது.

இந்த புதிய சம்பள அதிகரிப்பினால் புதிதாக இணைந்து கொள்ளும் மருத்துவ உத்தியோகத்தர் ஒருவருக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு 764 ரூபாவாகும் என்றும் பிரதி அமைச்சர் விபரித்தார்.

# எதிரணியினருக்கு சந்தர்ப்பம்

அதற்கமைய, அரசாங்கம் இந்த விடயத்தை நேர்மறையாகப் பரிசீலித்து உடனடியாக தமது முடிவை அறிவிக்கும் என சபை முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் கலந்துகொண்டுள்ளர்.

# பொலிஸ் ஆணைக்குழு மீது குற்றச்சாட்டு

சனிக்கிழமை (22) அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இந்த மோதல் வெளிச்சத்திற்கு வந்த போது, பதில் ஐஜிபி, பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் பிரிவின் உள் பணிகளில் தலையிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

இடமாற்றங்கள் செய்வதற்குத் தேவையான அதிகாரங்கள் இல்லாமல், தான் பெயரளவில் மட்டுமே ஐ.ஜி.பி. என்று ஐ.ஜி. பியாக இருப்பதாக கூறியிருந்தார்.

இந்த விடயத்தில் சட்டமா அதிபரின் கருத்து கேட்கப்பட்டதாகவும், இவை ‘நியமனங்கள்’ அல்ல, மாறாக ‘இடமாற்றங்கள்’ என்றும், இவற்றை ஐ.ஜி.பி. மேற்கொள்ளலாம் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அறிக்கைகளின்படி, OIC நியமனங்களுக்காக பதில் IGP பரிந்துரைத்த 197 பெயர்களில், தேசிய பொலிஸ் ஆணைக்குழு இதுவரை சுமார் 140 பெயர்களை அங்கீகரித்துள்ளது.

பரிந்துரைக்கப்பட்ட சில பெயர்கள் அத்தகைய பதவியை வகிக்கத் தேவையான தகுதிகள் இல்லாததால் நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை

இந்த விடயம் தொடர்பில் அண்மையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, புதிய பொலிஸ் நிர்வாகத்தின் கீழ், திறன் மேம்பாடு, நிறுவன மறுசீரமைப்பு, புதிய நுட்பங்கள் மற்றும் பொறிமுறை ஊடாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பிலும் அறிவிக்கப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் துறையில் விசேட விசாரணைப் பிரிவின் வகிபாகம், குறிப்பாக சித்திரவதை மற்றும் வலிந்து காணாமல் போகச் செய்தல் போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய சட்ட அமுலாக்க அதிகாரிகளை விசாரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வழக்குத் தொடருதல் மற்றும் தண்டனைகள் குறைவாக இருப்பது குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலைகளை எழுப்பியுள்ளது.

இந்த கலந்துரையாடலில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் அனைத்து ஆணையாளர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், பதில் பொலிஸ் மா அதிபர், சட்டம் மற்றும் காவல்துறை மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலசலகூடத்தில் சிசுவை பிரசவித்து யன்னலில் வீசிய மாணவி சிக்கினார்

இதுபற்றி தெரியவருவதாவது, மாவட்டத்தில் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த உயர்தரத்தில் கல்வி கற்று வரும் 18 வயதுடைய மாணவி ஒருவர், கர்ப்பிணியான விடயத்தை மறைத்து வயிற்றுவலி என கூறி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை 3.30 மணியளவில் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அதிகாலை 5 மணியளவில் குறித்த மாணவி மலசலக்கூடத்திற்குச் சென்ற நிலையில், சிசுவைப் பெற்று யன்னல் வழியாக வீசியநிலையில் சிசு, யன்னலில் கீழ் உள்ள பிளேற்றில் வீழ்ந்து அழுகுரல் கேட்டதையடுத்து தாதியர்கள் அங்கு சென்று சிசுவை மீட்டுள்ளனர். பின்னர் சம்பவம் தொடர்பில் தெரியவந்ததையடுத்து வீசிய சிசுவை மீட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன், தாய்க்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குறித்த தாயியும் சேறும் பாதுகாப்பாக உள்ளதாக மட்டு. போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கலாரஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்தார்.

# தேயிலைத்துறை வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு


2025ஆம் ஆண்டில் தேயிலைத் துறையின் வளர்ச்சிக்கு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

அதன்படி, முதல் கட்டமாக மானியமாக 34.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சிறிய தேயிலைத் தோட்டங்களில் புதிய தேயிலையை உருவாக்கும் நோக்கில், இரண்டாம் கட்டத்திற்காக 17. 5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டு மறு சாகுபடிக்கான நிலுவைத் தொகைக்காக 22.3 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னர் பயன்படுத்தப்படாத நிலத்தில் பயிர்களைப் பயிரிடுவதற்கான புதிய திட்டத்தின் விபரங்களையும் அமைச்சர் பகிர்ந்து கொண்டார், இதற்காக 27.42 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், சில தோட்டங்களில் தரிசு நிலங்கள் இருப்பதால், அந்த பாவனைக்கு உட்படுத்தப்படாத நிலங்களைப் பயிரிடப் பயிர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் 5.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. நேரடி தேயிலை சாகுபடிக்கான மானிய திட்டத்திற்கு 6.0 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாகத் தேயிலை சாகுபடியின் கீழ் தரிசு நிலங்களை நடவு செய்வதற்கும் அதைச் செயல்படுத்துவதற்கும் மானியத் திட்டத்தைத் தொடங்க 2.62 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மேலும் குறிப்பிட்டார், பத்து ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில் நீர்ப் பாசன வசதிகளை ஏற்படுத்த 10 மில்லியன் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.



உயர்தர தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், மூல தேயிலையின் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில், பிளாஸ்டிக் பெட்டிகள் மற்றும் நைலோன் பைகளை வழங்குவதற்கான மானியத் திட்டத்திற்கு 35 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்குப் புரிதல் மற்றும் திறன் மேம்பாட்டை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் கணிசமான பகுதி தேயிலைத் துறையின் வளர்ச்சியை முன்னேற்றுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

# NPP உயர்மட்ட அரசியல் பீட உறுப்பினராக சிவப்பிரகாசம் நியமனம்





மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமை ஆய்வாளர் மலையகத்தின் கல்விமானும் கலாநிதி பி.பி.சிவப்பிரைகாசம் தேசிய மக்கள் சக்தியின் (NPP) தேசிய உயர்மட்ட அரசியல் பீட உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கெனவே தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நிறைவேற்று குழு உறுப்பினராகவும், மலையக தேசிய குழு உறுப்பினராகவும் உள்ளார். தேசிய அரசியல் பீட உயர்மட்ட குழுவிலே ஜனாதிபதி மற்றும் பிரதமர் முக்கியமான உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவாகும். இந்த குழுவில் நாட்டினுடைய தேசிய கொள்கை திட்டங்களையும் செயல் திட்டங்களையும் தீர்மானம் எடுப்பதும் நிறைவேற்றுவதும் பொறுப்பாகும்.

இந்த குழுவில் கலாநிதி சிவப்பிரகாசம் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மிக முக்கியமான ஒரு விடயமாகும். மலையக பிரச்சினைகள் விடயதானங்கள் தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் கலாநிதி சிவப்பிரகாசம் பேராதனை. கொழும்பு பல்கலைக்கழகம் திறந்த பல்கலைக்கழகம். செழிணாஸ் பல்கலைக்கழகம் போன்றவற்றிலே கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அழுக்கலை நிபுணர் கைது



கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 1.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு தயாரிப்பு சிகரெட்டுகளை கடத்த முயன்ற இலங்கை பயணி ஒருவரை, பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

27 வயதான குறித்த பெண் கடவத்தை சூரியபலுவ பகுதியை சேர்ந்த அழகுக்கலை நிபுணர் ஆவார்.

அவர் சனிக்கிழமை (22) பிற்பகல் 03.30 மணிக்கு துபாயிலிருந்து ஃபிட்ஸ் ஏர் விமானம் 8D-824 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் எடுத்துச் சென்ற பொருட்களில் 10,000 வெளிநாட்டு சிகரெட்டுகள் இருந்ததுடன் அவரிடம் இருந்த 50 அட்டைப் பெட்டி சிகரெட்டுகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

குறித்த பெண் தற்போது பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டு, செவ்வாய்க்கிழமை (25) நீர்கொழும்பு நீதவான் முன் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

# காதலியின் நடனத்தால் உயிர் மாண்ட காதலன்

சுமார் ஒன்றரை வருடங்களாக தன்னுடன் காதல் தொடர்பில் இருந்த யுவதியுடன் ஏற்பட்ட மனக் கசப்பு காரணமாக 19 வயது இளைஞன், சனிக்கிழமை (22) அன்று தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் மொனராகலையில் இடம்பெற்றுள்ளது.

இவர் மொனராகலை - ஹுலந்தாவ தெற்கைச் சேர்ந்த ஒரு யுவதியுடன் சுமார் ஒன்றரை வருடங்களாகக் காதல் உறவில் இருந்து வந்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு, அவரது காதலி, கருத்து வேறுபாடு காரணமாக அவருடன் உறவை முறித்துக் கொண்டார். அந்த இளைஞன் உறவை மீண்டும் கட்டியெழுப்ப முயன்றுள்ளார், ஆனால், அந்த யுவதி அதற்கு உடன்படவில்லை.

எனினும், சனிக்கிழமை (22) அன்று மொனராகலை பிரதேச சபை மைதானத்தில் ஒரு இசை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு சென்றபோது, தன்னுடைய காதலி இன்னொரு இளைஞனுடன் நடனமாடுவதைக் கண்டு குறித்த இளைஞன் கலக்கமடைந்துள்ளார்.

அவருடன் வந்திருந்த தனது நண்பர்களுக்குத் தெரிவிக்காமல், மைதானத்தை விட்டு வெளியேறிய இளைஞன், வீடு திரும்பி, தனது அறையில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் பிரேதப் பரிசோதனை மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனையில் ஞாயிற்றுக்கிழமை(23) நடத்தப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் கூறியுள்ளனர்.

# வீட்டிற்கு சென்ற என்னை தாக்கியவர் யார்?



ஹட்டன் தனியார் பேருந்து நிலையத்தில் வைத்துப் பயணி ஒருவரின் கழுத்தில், இனந்தெரியாத நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிய பின்னர் தப்பிச் சென்ற சம்பவம் சனிக்கிழமை (22) அன்று இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நபர் முச்சக்கரவண்டியொன்றில் சென்று உடனடியாக டிக் ஓயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவரின் மோசமாக இருந்ததால், அவரை பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தன்னை தாக்கிய நபர் யார்? மற்றும் எதற்காகத் தாக்கினார்? என்பது தெரியவில்லை என காயமடைந்த நபர், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவத்தை விசாரித்த ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள், காயமடைந்த நபர் ஹட்டன், டிக் ஓயா, லெட்டாண்டி தோட்டத்தைச் சேர்ந்த 27 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. குறித்த நபர் தனது வீட்டிற்குச் செல்வதற்காகப் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தபோதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கசிப்பு காய்ச்சிய கடற்படை அதிகாரி



பதுளை மாவட்டம் ஊவா பரணகம - கெடகொட பிரதேசத்தில் உள்ள தனது வீட்டில் பாரியளவிலான கசிப்பை விற்பனைக்காக வைத்திருந்த கடற்படை அதிகாரி ஒருவர் அம்பகஸ்தோவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுமுறையில் சென்ற கடற்படை அதிகாரி, நீண்ட நாட்களாக இத்தொழிலை மேற்கொண்டு வந்துள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரியின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சுமார் 18,000 கிராம் கோடா மற்றும் கசிப்பு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, மற்றுமொரு சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது

தப்பி சென்ற நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அம்பகஸ்தோவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ‘மாதவிடாய்’ தவறியதால் சிக்கிய மாணவி

9ஆம் வகுப்பில் கல்விப் பயிலும் மாணவியைக் கர்ப்பமாக்கிய இளைஞன் ஒருவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பிபில பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் பெண் டிக்டாக் செயலி மூலம் அடையாளம் காணப்பட்ட ஒரு இளைஞனுடன் காதல் உறவில் இருந்துள்ளார். தாத்தாவின் இறுதிச் சடங்கிற்குப் பிறகு, தனியாக இருக்கும் பாட்டிக்கு உதவியாகச் சென்றுள்ளார். 27/11/2024 அன்று, பாட்டி வீட்டில் இல்லாத நேரத்தில், அந்த இளைஞன் வீட்டிற்கு சென்றுள்ளார், மேலும் அவர்கள் இருவரும் கணவன்-மனைவி போல நடந்து கொண்டுள்ளனர். அன்றிலிருந்து அவர்கள் பலமுறை கணவன் மனைவியாக இருந்துள்ளனர். ஜனவரி 2025 இல் ஒரு நாள், அந்தப் பெண்ணுக்கு மாதவிடாய் தவறியதால், அவரை சிறுநீர் பரிசோதனைக்கு அனுப்பினார், அதில் அவள் கர்ப்பமாக இருப்பது தெரியவந்துள்ளது. பின்னர் சிறுமி பொரலஸ்கமுவ பகுதியில் உள்ள அவரது சகோதரி தங்கியிருந்த ஒரு தங்கும் விடுதிக்கு அனுப்பப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பிபில பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.


# பயணப் பொதிக்குள் 123 தோட்டாக்கள்

பேருந்தின்ப யணப் பொதிக்குள் வைக்கப்பட்டிருந்த சுமார் 123 தோட்டாக்களை சனிக்கிழமை (22) அன்று பண்டாரவளை பொலிஸார் மீட்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளை பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த பேருந்தொன்றை சோதனையிட்ட போதே இந்த தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்குரிய எந்த நபரும் கண்டுபிடிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தோட்டாக்களில் 113 பிஸ்டல் தோட்டாக்கள், ஒன்பது T56 தோட்டாக்கள் மற்றும் T56 LMG தோட்டா ஒன்றும் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது.

# மலைநாடு செல்பவர்களுக்கு எச்சரிக்கை



நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நிலவும் வறண்ட வானிலை மற்றும் கடுமையான வெயில் காரணமாக மத்திய மலைநாட்டில் எந்த நேரத்திலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் இருப்பதால், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று பொலிஸார், வன பாதுகாப்பு, வனவிலங்கு துறை அதிகாரிகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், காடுகளில் விழும் வலுவான சூரிய ஒளி காரணமாக, அந்தக் காடுகளில் உள்ள தாவரங்கள் வெயிலால் எரிந்து எந்த நேரத்திலும் தீப்பிடிக்கும் நிலையில் உள்ளன.


மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள பல இயற்கை காடுகளில் இந்த நிலைமையைக் காணலாம். கண்டியின் மாத்தளை மாவட்டத்தின் எல்லையில் உள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரின் சில பகுதிகள், ஹந்தான மலைத்தொடர் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் எல்லையில் உள்ள ஹோர்டன்தென்ன ஆகியவற்றின் அதிக ஆபத்துள்ள நிலையில் உள்ளன.

கடந்த சில நாட்களாக பல ஒதுக்கப்பட்ட காடுகளில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் வந்தன.

இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு, எந்த நேரத்திலும் காட்டுத் தீ ஏற்படும் அபாயம் இருப்பதால், பொதுமக்கள் மற்றும் இந்த இடத்தைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ரயில் மீது தாக்குதல்; சிறுவர்கள் கைது

**புகழிந்தன்**



யாழ்.தேவி ரயில் மீது கற்களை வீசி தாக்கய சம்பவத்தில் தொடர்புடைய மூன்று சிறுவர்களை யாழ். பொலிஸாரினால் சனிக்கிழமை (22) அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை மாவட்ட பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்கவின் கட்டளைக்கு இணங்க, மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவின் தகவலுக்கு அமைய முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.தேவி ரயில் வெள்ளிக்கிழமை (21) அன்று யாழ். நோக்கி வரும் பொழுது, அரியாலை பகுதியில் வைத்து ரயில் மீது கல்வீச்சு தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அதனை ரயிலில் வந்த ஒருவர் காணொளியாகப் பதிவு செய்துள்ளார் .

ஏற்கெனவே நடத்திய கல்வீச்சு தாக்குதலில் ஒருவர் காயமடைந்து நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து யாழ். ரயில் நிலையம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த விடயம் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 15-13 வயதுகளுக்குட்பட்ட சிறுவர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பாடசாலைக்கும் ஒழுங்கீனமானவர்கள், ஏற்கனவே சிறு சிறு குற்றங்களைப் புரிந்தவர்கள் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களைப் பெற்றோர்களின் உதவியுடன் சிறுவர் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# புதுக்கடை விவகாரம்: பி.சி வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

புதுக்கடை நீதிமன்றத்தின் 5ஆம் இலக்க நீதிமன்ற அறைக்குள் பாதாள உலக நபரான ‘கணேமுல்லே சஞ்சீவ’ சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட அதுருகிரிய பொலிஸ் கான்ஸ்டபிளின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல வெடிமருந்துகள் மற்றும் ஒரு சொகுசு கார் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

12 போர் துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் ஏழு தோட்டாக்கள், M16 வகை ஆயுதங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு உயிருள்ள தோட்டா, ஒரு மின்னணு தராசு மற்றும் ஒரு சொகுசு கார் ஆகியவையும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் குற்றம் தொடர்பாக இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அரசியல் ஆளுமை, வலிமையை உருவாக்குவது அவசியம்

தேசிய பாதுகாப்பு நாட்டின் முதுகெலும்பாகும். தேசிய பாதுகாப்பைப் பராமரிப்பது ஓர் அரசின் பொறுப்பு. நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இனம், மதம், சாதி வேறுபாடு இல்லாமல், தேசிய அடையாளம் மற்றும் இறையாண்மையைப் பாதுகாத்து, சுதந்திரமான மற்றும் பாதுகாப்பான சூழலில் வாழ்வதற்குத் தேவையான சூழல் உருவாக்கப்படும் சூழ்நிலையே தேசியப் பாதுகாப்பாகும்.

இராணுவ, பொருளாதார, வள, எல்லை, மக்கள்தொகை, பேரிடர், எரிசக்திப், புவிசார் மூலோபாயம், தகவல், உணவு, சுகாதார, இன, சுற்றுச்சூழல், சைபர் மற்றும் மரபணுப் பாதுகாப்பு ஆகியவை தேசிய பாதுகாப்பின் அடிப்படைக் கூறுகளாகும். தேசியப் பாதுகாப்பு சரிவு என்பது அந்த அனைத்து கூறுகளின் சரிவையும் குறிக்கிறது.

அப்படியானால், பாதாள உலகில் எங்கும் ஒரு துப்பாக்கிச் சூடு நடத்துவதன் மூலம் தேசியப் பாதுகாப்பை சமரசம் செய்ய முடியாது. இருப்பினும், எந்த சூழ்நிலையிலும் பாதாள உலகம் சுதந்திரமாக ஆயுதங்களைச் சுட அனுமதிக்கும் சூழலை உருவாக்க முடியாது.

தேசிய பாதுகாப்பு சரிந்து விட்டதாக உரக்க வாதிட்டுக் கூச்சலிடுபவர்கள்தான் அந்த பாதாள உலக பயங்கரவாதத்தை நீண்ட காலமாக வளர்த்து வந்தவர்கள் என்பது ஒரு பிரச்சினை.

வரலாற்றில் இடம்பிடித்த பல அரசியல்வாதிகள், பாதுகாப்புப் படையினரை அல்ல, பாதாள உலக உறுப்பினர்களையே தங்கள் மெய்க்காப்பாளர்களாக நியமித்துள்ளனர். அதாவது, பாதாள உலகம் அரசியலுடன் மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தது. இதன் மூலம் அரசியல்வாதிகளின் சமூக விரோத நடவடிக்கைகளை அடக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் பாதாள உலகத்திலிருந்து பெறப்பட்ட ஆதரவு மகத்தானது என்பதை அங்கீகரிக்க முடியும்.

அரசியல்வாதிகள் பாதாள உலகத்தை வளர்ப்பதிலும் வளர்ப்பதிலும் ஈடுபட்டிருப்பது போலவே, இந்த நாட்டில் ஊடகங்களும் பல்வேறு மட்டங்களில் அவர்களை சமூக மயமாக்குவதில் பங்களித்துள்ளன.

ஊடகங்களைத் தவிர வேறு யார்தான் பாதாள உலகத் தலைவர்களின் பெயர்களைத் தலைப்புச் செய்திகள் மூலம் சமூக மயமாக்கி, அவர்களுக்குப் பொருத்தமான சமூக விழுமியங்களை வழங்கியுள்ளனர்? பாதாள உலகத்தை அடக்க, பாதாள உலகத்துடன் இணைக்கப்பட்ட பிற வலைப்பின்னல்களையும் அம்பலப்படுத்த வேண்டும்.

போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் உள்ளிட்ட பல சமூக விரோதச் செயல்களில் அரசியலும் பாதாள உலகமும் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையின் அரசியல் அல்லது சமூகவியல் பகுப்பாய்வு எதுவாக இருந்தாலும், பாதாள உலகத்தின் பாதுகாப்பு அரசியல்மயமாக்கப்படும் வரை இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளைக் கண்டறிய முடியாது.

அரசியல் பாதுகாப்பின் காரணமாகவே, கண்ணியத்துடன் வரும் பாதாள உலக நபர்கள், பிரபலமான எந்த இடத்திலும் குற்றங்களைச் செய்து பொலிஸாரினால் கைது செய்யப்படும்போது சிரித்த முகத்துடன் புகைப்படங்களைப் பார்க்கிறார்கள்.

பாதாள உலகம் திடீரென்று ஒரு தலையாக மாறியது என்ற கருத்தை சமூகமயமாக்குவது தவறு. எந்த அரசியல் கட்சி ஆட்சியில் இருந்தாலும், பாதாள உலகம் அதன் செயல்பாடுகளை மேற்கொள்ளும். ஆனால் அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்குத் தேவையான அரசியல் ஆளுமையையும் வலிமையையும் உருவாக்குவது அவசியம். தற்போதைய அரசாங்க அதிகாரிகள் இதற்குத் தேவையான சூழலை உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். பின்னர், பாதாள உலகத்தின் கடவுள் தந்தையர்களுடன் சேர்ந்து பாதாள உலகத்தை அடக்குவது சாத்தியமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# பலனை அனுபவிக்கும் அரசியல்

லக்ஸ்மன்

**நாட்டில் பாதுகாப்பற்ற சூழல் ஒன்று உருவாகி வருகிறது. அதற்கு கொழும்பில் நீதிமன்றத்திற்குள் நடந்து முடிந்திருக்கின்ற துப்பாக்கிச் சூடு முற்றுப் புள்ளியாக அமையுமா என்பது தெரியாமலிருக்கிறது. ஊழல், இலஞ்சம், போதைப்பொருள் பிரச்சினையென அடுக்கிக் கொண்டு செல்லக் கூடியளவுக்கான சிக்கல்கள் நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் திருத்தங்கள் ஏதுவுமின்றி, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தவகையில் உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடைபெறும் என்பது உறுதியாகியிருக்கிறது.

இந்த நிலையில்தான், உள்ளூராட்சித் தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பது தொடர்பான ஆரூடங்கள் வந்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலும், ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடைபெறலாம் என தகவல்கள் வந்தாலும், கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை, மற்றும் சித்திரைப் புத்தாண்டு போன்ற விடயங்கள் கவனத்திலெடுக்கப்பட்டே திகதி தீர்மானிக்கப்பட வேண்டும். இருந்தாலும், வேறு பல காரணங்கள் இந்தத் திகதித் தீர்மானத்தில் இருக்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில், மார்ச் 21 வரை நடைபெற்று வருக்கின்ற வரவு-செலவுத் திட்ட விவாதமும் காரணமாகும்.

வரவு-செலவு திட்ட விவாத காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களது அரசியலமைப்பு ரீதியான கடமையை நிறைவேற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற வகையில், தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்க்கட்சிகள் தங்களது இயலாமை காரணமாக உள்ளூராட்சித் தேர்தலைக் காலம் தாழ்த்தும்படி கோருவதாக ஆளும் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுக்களும் வெளிவருகின்றன.

இருந்தாலும் பாராளுமன்ற செயற்பாடுகள் எந்தளவுக்கு சிக்கலானவை என்பதைத் தெரியாத புதியவர்கள் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள் என பெருந்தன்மையுடன் எதிர்க்கட்சிகள் கடந்து சென்றிருக்கின்றன. அதே நேரத்தில், பாராளுமன்றத்தில் சட்ட மூலங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க ஆளுங்கட்சிக்கு அதிகாரம் உண்டு. அதற்காக தேர்தல் ஆணைக்குழுவை தமது கைப்பாவையாகப் பாவிக்க முடியாது. தேர்தல் தினத்தையோ, வேட்புமனுக் காலத்தையோ தீர்மானிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சி தெரிவித்திருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் பொருளாதாரக் காரணங்கள் காண்பிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர், அது நடத்தப்படாமல் விடப்பட்டு, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் குடைச்சல்கள் எந்தப் பயனையும் தரவில்லை. உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதாகவே இருந்தது. பின்னர், கடந்த வருடத்தில், ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு, ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதியானார். அவர் பதவியேற்றவுடன் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்தி பெரும்பான்மையான ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்.

ஆனால், பாராளுமன்றத் தேர்தல் போன்று அவரால் எடுத்த எடுப்பில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியவில்லை. அதற்கு நாட்டின் சட்டம் காரணமாக இருந்தது. இப்போதுதான் உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் கொண்டுவரப்பட்டு, அது எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தேர்தல் நடைபெறும் என்பது உறுதியாகியிருக்கிறது.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் உள்ளூராட்சித் தேர்தல்கள் தேசியக் கட்சிகளின் அரசியல் நிலைமையை நாடி பிடித்துப் பார்ப்பதற்கான ஒரு இடமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உருவாக்கப்பட்டு அவர்கள் உடனடியாக நாடி பிடித்துப் பார்த்தது உள்ளூராட்சித் தேர்தலையேயாகும். உள்ளூராட்சித் தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி அக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான கோட்டபாய ராஜபக்ஷ வெற்றிபெற வாய்ப்பளித்தது.

இதனையடுத்து, பெரும்பான்மை அதிகாரத்துடனான ஆட்சியை ஏற்படுத்த முடிந்தது. ஆனால், அதனைச் சரியாகக் கொண்டு நடத்த முடியாமல் போனதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஒருவருடம் கடந்த நிலையில், அதிகாரத்தினைக் கைப்பற்றியது, ஜே.வி.பியிலிருந்து தேசிய மக்கள் சக்தி ஏற்படுத்தப்பட்டு ஒரு சில வருடங்களிலேயே முழு நாட்டையும் கைப்பற்றிக்கொள்ள முடிந்திருக்கிறது.

இவ்வாறான அதிகார நிலைமைகள் இருக்கையில்தான் தற்போது நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலை எதிர்க்கட்சிகள் தங்களது நாடி பிடிப்புக்கானதாகவும் தங்களுக்கான ஆதரவு அலையினை அதிகரித்துக் கொள்வதற்கான களமாகவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படியென்றால், அடுத்து நடைபெறவுள்ள மாகாண சபைகள், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றினை இலக்காகக் கொண்டதாக இந்த உள்ளூராட்சித் தேர்தல் களம் அமையும். இது ஆளும் கட்சிக்கும் பொருந்தும். பல வருடங்களாக நடைபெறாமலிருக்கின்ற மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்படாமல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்படவிருப்பதிலும் இந்த அதிகாரக் கைப்பற்றல் தந்திரம் இருக்கிறது.

இந்த இடத்தில்தான் தமிழர்களும், தமிழர்களுடைய அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும் எவ்வாறான நகர்வுகளை மேற்கொள்வார்கள் என்பது உரசுகிறது. தேசியக் கட்சிகள் தங்களுடைய அரசியலைத் தேசிய களம் நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கையில் உள்ளூராட்சித் தேர்தலைத் தமிழர் அரசியல் மாகாண சபையை இலக்காகக் கொண்டதாகவே நகர்த்துவார்கள்.

பாராளுமன்றத் தேர்தலில் அனுர அலை தாக்கம் செலுத்தியது. ஆனால், அது எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சற்றுத் தாக்கம் குறைந்ததாகவே இருக்கும் என்ற கருத்து உருவாகத் தொடங்கிவிட்ட நிலையில், தேசிய மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் பிரகாசிக்காது என்பது சிலரது கருத்தாக இருக்கிறது. அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்வது தேசிய அரசியலை இலக்கை அடிப்படையாகக் கொண்டது. இருந்தாலும், வட்டாரங்களைக் கொண்டதாக இருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை சற்று வித்தியாசமான அணுகுமுறைகளையே கையாளவேண்டியிருக்கும்.

ஏனெனில், ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரங்கள் மாற்றம் என்ற கோசத்துடனேயே கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் அமைந்திருந்தன. ஆனால், ஏப்ரலின் பின்னர் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இந்த மாற்றம் கோசம் எவ்வாறு ஆதிக்கம் செலுத்துமா என்பது ஆராயப்படவேண்டியதே.

மக்களின் அடிப்படையான பிரச்சினைகளைத் தேர்தல் கோசமாகக் கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தி இதுவரையில் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறதா? என்று கட்டாயமாக மக்கள் சீர்தூக்கிப் பார்ப்பர். அவ்வாறான தெளிவுபடுத்தல்களை எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளவேண்டியுமிருக்கும். இந்த வேறுபட்ட நிலைகளுக்குள் தேசிய மக்கள் சக்தி தங்களுடைய பிரசாரங்களை மேற்கொண்டாகவேண்டும்.

இருந்தாலும், கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் வீசிய அனுர அலையானது மாற்றம் பெற்றிருக்கிறதா என்பதனை அறிந்துகொள்வதற்கான தேர்தலாகவும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் அதிகாரங்களை இழப்பதற்குத் தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றனரா? என்பதற்கான பதிலாகவும் அமையும். வெறுமனே அபிவிருத்திகளைக் காண்பித்து தமிழ் மக்களின் உரிமை சார் கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்து விட முடியுமா? என்பது சவாலான கேள்வியே.

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி விட சில குழுக்கள் சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக மேற்பூச்சுக்குச் சொல்ல முயன்றாலு,ம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்ற செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட வேண்டும். அதனை விடுத்து, வெறுமனே விம்பங்களினூடு எதனையும் சாதித்து விட முடியாது. ஜனாதிபதி மாற்றத்தில் தொடங்கிய ஆட்சி மாற்றம் மக்களுக்குப் பெரியளவில் வரப்பிரசாதங்களை அள்ளி வீசும் என்று நம்பிய மக்களுக்கு வரவு- செலவுத் திட்டம் பெரிதாக எதனையும் கொண்டுவரவில்லை. இவ்வாறான நிலையில், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் அதற்கான பதிலை வெளிப்படுத்துவதாகவே அமையும். அந்தவகையில் ஆட்சி மாற்றத்தின் மூலமாக நாட்டு மக்கள் அடைந்து கொள்ள நினைத்தவைகளுக்கான பலனாக அல்லது பதிலாக அமையும் என்றே சொல்ல வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

முதியவர்கள் தாங்கள் கடந்துவந்த காலம் வேகமானது எனச் சொல்வதுண்டு. தங்களுக்கு முதுமை எப்படி வந்தது என்று ஆச்சரியப்படுவதுண்டு.

நடந்தவை எல்லாம் நேற்று நடந்ததுபோல் உணர்வார்கள். காலச் சுழற்சி வேகமானது. மனிதனின் பருவமாற்றங்கள் மாறியபடியே இருக்கும். வயது கூடிவிட்டதே எனக் கவலைப்படலாகாது.

எனவே, வேகமான உலகில் எமக்கான கடமைகளை ஒத்திவைப்பது கூடாது. "நாளைக்குச் செய்வோம்" எனக் கூறியே நேரங்களை வீணடிப்பவர்கள் அநேகர். கால ஓட்டம் எமக்காக நிற்காது.

மனிதன் தனக்காக மட்டும் வாழ முடியாது. பெற்றோர் தமது பிள்ளைகள், நெருங்கியவர்களுக்காகவும் சமூகத்தின் நலன்களை நிறைவேற்றவும் உழைக்க வேண்டியுள்ளது.

காலங்கள் கடிதெனக் கரைவதால், அதிவேகமாக உழைக்க வேண்டியுள்ளது. சும்மா இருந்தால் பொறுப்புகளை நிறைவேற்றுவது எவர்? கரைந்துவிடும் காலத்தில், உயர்ந்துவிட வேகத்துடன் இயங்குக!

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாடசாலை மாணவிகளின் உயிருக்கு ஆபத்து



கல்முனை வலயத்தில் உள்ள காரைதீவு இகி.சங்க பெண்கள் பாடசாலையின் 90 25 நீள அகலமுள்ள மூன்று மாடிக் கட்டிடத்தில் முதலிரு தளங்களில் 08 வகுப்புகள் இருந்தன. அதில் சுமார் 240 மாணவிகள் கல்வி கற்று வந்ததுடன், கீழ்த் தளத்தில் அதிபர் அலுவலகம் உள்ளிட்ட நிர்வாக அலகு இயங்கி வந்தது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த கட்டிடத்தின் தூண்கள் தூர்ந்து தளங்கள் மோசமாகக் காணப்பட்டுள்ளது. அந்த வகுப்புகளில் கற்ற மாணவிகளை உடனடியாக ஒன்று கூடல் மண்டபத்திலும் ஏனைய இடங்களிலும் மாற்றி வைத்திருக்கின்றார்.

இந்த வேளையில் இந்த ஆபத்தான கட்டிடம் இடிந்து விழுமானால் நூற்றுக்கணக்கான மாணவிகளைப் பலி கொள்ள ஏதுவாக இருக்கும் என்ற விடயம் பரவலாக ஊருக்குள் கசிந்தது.

இந்த விடயம் தொடர்பாகக் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.ஆர்.ஹசந்தி கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார். இதற்கென்று ஒரு குழுவை நியமித்து உடனடியாக இதற்குரிய தீர்வை காணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

- வி.ரி.சகாதேவராஜா

# SLT-MOBITEL இலங்கையில் EGUARDIAN உடன் கைகோர்ப்பு




இலங்கையில் நுண் மற்றும் சிறிய, நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களுக்கு Zoho இன் பரந்த மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் வியாபார முகாமைத்துவ சாதனங்களை பெற்றுக் கொடுப்பதற்காக EGUARDIAN Pvt. Ltd உடன் மூலோபாய மீள்விற்பனை உடன்படிக்கையில் SLT-MOBITEL Enterprise கைச்சாத்திட்டுள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, பிராந்தியத்தில் டிஜிட்டல் மாற்றியமைப்பை மேம்படுத்தும் எனவும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையில் SLT-MOBITEL இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க மற்றும் EGUARDIAN Pvt. Ltd.இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மபாஸ் பாரிட் ஆகியோர் கைச்சாத்திட்டனர். இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். Zoho Financial Suite, Zoho Workplace மற்றும் Zoho Marketing Plus போன்ற Zoho இன் பரந்தளவு cloud-அடிப்படையிலான அப்ளிகேஷன்களுக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அதனூடாக உள்நாட்டு வியாபாரங்களுக்கு தமது செயற்பாடுகளை சீராக்கி, வாடிக்கையாளர் உறவுகளை கட்டியெழுப்பும்.

இந்த மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தீர்வுகளை உள்வாங்கி, இலங்கையின் வியாபாரங்களுக்கு தமது சேவைத் தரத்தை மேம்படுத்தகி கொள்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பை SLT-MOBITEL வெளிப்படுத்தியுள்ளது. உள்நாட்டு தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க தீர்வுகளை இந்தப் பங்காண்மை பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த நுண் மற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு போட்டிகரமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரித்துவரும் டிஜிட்டல் உலகில் நிறுவனங்களுக்கு இயங்குவதற்கு வசதியளிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக இது அமைந்துள்ளது.

# ‘கெதெல்ல’ கண்காட்சியில் கொமர்ஷல் வங்கியின் நலன்கள்

கொழும்பு BMICH இல் நடைபெற்ற வீடமைப்பு கண்காட்சியான ‘கெதெல்ல லிவிங் இன் ஸ்டைல்’ ‘Kedella’ Living in Style நிகழ்வுக்கு உத்தியோகபூர்வ வங்கிப் பங்குதாரராக கொமர்ஷல் வங்கி இணைந்திருந்ததுடன், குறித்த கண்காட்சியைப் பார்வையிட்ட வீடு நிர்மாணிப்பாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களின் அபிலாஷைகளை முன்னெடுப்பதற்கு தேவையான உதவிகளை வழங்க தயாராகவுள்ளது.

கெடெல்ல கண்காட்சியில் பதிவு செய்த பார்வையாளர்களுக்கு வீட்டுக் கடன்களுக்கான நிலையான விகிதத்திற்கு எதிராக. வருடாந்தம் 1.5% சிறப்பு வீதக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. மேலும் இந்த வாடிக்கையாளர்கள் ஆவணக் கட்டணங்களில் 50% விலைக்கழிவுக்கும் தகுதியுடையவர்கள் ஆகின்றனர். அதே வேளை முதல் முறையாக வீடு கட்டுபவர்கள் அல்லது வீடு கொள்வனவு செய்பவர்கள் இலவசக் குறையும் தவணை உத்தரவாதக் கொள்கை (DTAP) அல்லது வங்கியிடமிருந்து கடன் பாதுகாப்புக் காப்புறுதியைப் பெறுவார்கள்.

மேலும் கொமர்ஷல் வங்கி, கெதெல்ல கண்காட்சியில் பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கு தனிநபர் கடன்கள் மற்றும் குத்தகைக்கான வட்டி வீதத்தில் 0.5% குறைப்பு மற்றும் ஆவணக் கட்டணங்களில் 50% விலைக்கழிவு என்பவற்றையும் வழங்கியுள்ளது.




கெதெல்ல கண்காட்சியானது இலங்கையில் மிகப் பாரிய வீடு,உள்ளகம், சொத்து மற்றும் நிர்மாணக் கண்காட்சியாக திகழ்கிறது. மேலும், இது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் உற்பத்தியாளர்கள், வடிவமைப்பாளர்கள் மற்றும் நிதியியல் சேவை வழங்குநர்களுக்கு நேரடியாகத் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான தனித்துவமான நேருக்கு நேர் வாய்ப்பை வழங்குகிறது. கொமர்ஷல் வங்கி கடந்த வருடங்களில் பல கெதெல்ல கண்காட்சிகளுக்கு தனது ஆதரவினை வழங்கியுள்ளது.

## வட மாகாணத்தில் வசதிகளை

# மேம்படுத்த ஜப்பான் ஆதரவு

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமட்டா வடமாகாணத்திற்கான தனது முதல் பயணத்தின் போது, Humanitarian Development Organization (HDO) மற்றும்Nuffield School for Deaf and Blind ஆகிய இரு அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ‘Grant Assistance for Grassroots Human Security Projects (GGP)’ திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டார்.

வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் முன்னிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இந்தகைச்சாத்திடும் நிகழ்வு நடைபெற்றது.


வடக்கு மாகாணத்தில் மருத்துவ மற்றும் கல்விவசதிகளை மேம்படுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் இந்த திட்டங்களுக்காக 173,659 அமெரிக்க டொலர்களை (சுமார் 50 மில்லியன் ரூபாய்) ஒதுக்கியுள்ளது. மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது இலங்கைக்கான ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளில், குறிப்பாக பாதிப்புகளைத் தணிப்பதை ஊக்குவிப்பதை முன்னுரிமையாகக் கொண்டுள்ளது.




பளை பிரதேச வைத்தியசாலையில் புதிய உள்நோயாளர் பிரிவொன்றை நிர்மாணிப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரசேவையை மேம்படுத்தும் முகமாக "பளை பிரதேச வைத்தியசாலைக்கான மருத்துவ விடுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம்" HDO அலுவலகத்தால் முன்னெடுக்கபடவுள்ளது. மீள்குடியேற்றப்பட்ட14,927 மேற்பட்டோருக்கு சேவையாற்றும் இந்த வைத்தியசாலையானது தற்போது கடுமையான கூட்ட நெரிசல் மற்றும் போதிய சுகாதார வசதிகள் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளது.

“வடமாகாணத்தில் செவிபுலனற்றோர் மற்றும் பார்வையற்றோருக்கான நஃபீல்ட் பாடசாலையை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம்" சிறுவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான கற்றல் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கை முழுவதிலுமிருந்து செவிபுலனற்ற மற்றும் பார்வையற்ற குழந்தைகளுக்கு இலவச கல்வி மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கும் ஒரே தமிழ்மொழி நிறுவனமாக நஃபீல்ட் பாடசாலை திகழ்கின்றது. இந்த திட்டம் பாடசாலையில் மின்சார விநியோகம், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் விடுதி வசதிகளை மேம்படுத்த உதவும்.

இலங்கையில், குறிப்பாக வடமாகாணத்தில், பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான ஜப்பானின் உறுதிப்பாட்டை தூதுவர் இசோமாட்டா மீண்டும் உறுதிப்படுத்தினார்.



# “நாம் ஆளும் அரசியல் தீர்வும் வேண்டும்”

படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியும், எம்மை நாம் ஆளும் அரசியல் தீர்வும் வேண்டும் என்பதிலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தைத் தாமதப்படுத்துவது இந்த நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

மக்களை ஏமாற்றினால் கோட்டபய ராஜபக்ஷவை காட்டிலும் மிக மோசமான விளைவை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியலமைப்பின் ஊடாகவே தீர்வு கோருகிறோம் என்றார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (22) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மீதான 5 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 58 சத வீதமளவில் தான் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒதுக்கீடுகளின் செயலாற்றுகையை விளங்கிக் கொள்ளமுடியும்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்குப் பெருமளவிலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு மாகாண மக்கள் பெருமளவில் வாக்களித்தார்கள். ஆனால், மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் 6 சதவீதமான அளவு தான் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.



அத்துடன் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடுகள் வரவு-செலவுத் திட்டப் பதிவுகளில் இருக்கும் ஆனால் நடைமுறையில் ஏதும் நடக்காது. குறைந்தளவான நிதியை ஒதுக்கி வடக்கு மாகாண மக்களை ஏமாற்றலாம் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நினைக்கக் கூடாது என்றார்.

# “காணி உரிமைக்கு ஆதரவளிப்பேன்”



காணி உரிமை வழங்காமல் மலையக மக்களுக்கு எத்தனை வீடுகளை அமைத்துக் கொடுத்தாலும், அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை. அதனால், அரசாங்கம் காணி உரிமை வழங்குவதாகத் தெரிவித்தால் வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பேன் என ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், மலையகத்தில் ஸ்மாட் வகுப்பறை அமைப்பதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால், இந்த ஸ்மாட் வகுப்பறை இந்திய அரசாங்கத்தின் ஊடாக எமக்கு வழங்கப்படும் நன்கொடை. மாறாக இலங்கை அரசாங்கம் அங்கு ஸ்மாட் வகுப்பறை அமைப்பதில்லை. இதற்காக இந்திய அரசாங்கத்துக்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால், வரவு- செலவுத் திட்டத்தில் இவர்கள் ஸ்மாட் வகுப்பறை அமைப்பதற்கு 266 மில்லியன் ருபாவே ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த பணத்துக்கு எப்படி ஸ்மாட் வகுப்பறை அமைக்க முடியும் என கேட்கிறேன்.

அத்துடன், வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, அன்று 1,700 ரூபாய் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்தபோது ஜீவன் தொண்டமான் காட்டிக் ” கொடுத்து விட்டார். நாங்கள் 2,138 ரூபாய் பெற்றுக்கொடுப்போம் என அன்று எதிர்க்கட்சியிலிருந்த அனைவரும் தெரிவித்தார்கள். இப்போது ஜனாதிபதி 1,700 ரூபாய் பெற்றுக்கொடுப்பதாகத் தெரிவித்தபோது, அதற்கு ஜனாதிபதிக்குப் பாராட்டு தெரிவிக்கின்றனர். இது நியாயமா?

என்னைப் பொருத்தவரை அது தனியார்த் துறை.அவர்களுடன் இணக்கப்பாட்டுக்கு வந்தே இதனை மேற்கொள்ள வேண்டும். நாங்கள் தெரிவித்த 1,700 ரூபாய் சம்பளம் 1,350 ரூபாய் அடிப்படை சம்பளமும் 350 ஊக்குவிப்பு கொடுப்பனவும் என்ற அடிப்படையிலாகும்.

ஆனால், ஜனாதிபதியோ யாராக இருந்தாலும் முடிந்தால் தோட்ட கம்பனிகளுடன் கலந்துரையாடி அடிப்படை சம்பளத்துக்கு ஒரு ரூபாய் அதிகரித்துக் காட்டுங்கள் என சவால் விடுகிறேன். அது முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். பெருந்தோட்ட மக்கள் இலங்கை பிரஜைகளாக நடத்தப்படுவதில்லை. மாறாக பெருந்தோட்ட கம்பனிகளில் பிரஜைகளாகவே நடத்தப்படுகின்றனர் என்றார்.

# “ஆணைக்கு ஏற்றவாறு பட்ஜட் இல்லை”

‘வளமான நாடு, அழகான வாழ்க்கை’, ‘நாடு அனுரவுக்கு’. இதுதான் அன்று மக்கள் ஆணையைப் பெற முன்வைக்கப்பட்ட கொள்கைகள். இந்தக் கொள்கைகளின் பண்புகள் 2025 வரவு-செலவுத் திட்ட உரையில் எந்த அளவிற்கு உள்ளடங்கியுள்ளன என்பதை நாம் பார்க்க வேண்டும்.



வரவு-செலவுத் திட்டத்தின் கட்டமைப்பை, முன்வைப்பை, வெளிப்பாட்டைப் பார்க்கும்போது, வாக்குறுதி அளித்தபடியும் பெறப்பட்ட ஆணைக்கு ஏற்றவாறும் இந்த வரவு- செலவுத் திட்டம் உருவாக்கப் படவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்த வாதத்தை ஆதாரங்கள், தரவுகளுடன் நிரூபிக்க விரும்புகிறேன்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (22) அன்று இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

‘வளமான நாடு - அழகான வாழ்க்கை’ கொள்கை ஆவணத்தின் 105ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது மாற்றுக் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வைத் தயாரிப்பது பற்றியாகும். அந்த வாக்குறுதியைப் புறக்கணித்து இன்று என்ன நடந்துள்ளது?

இன்று மக்கள் மீது வரம்பற்ற அழுத்தம், துன்பம் திணிக்கப்பட்டு, மக்களுக்கு வழங்க வேண்டிய பலன்கள் குறைக்கப்பட்டுள்ளன. 2024 நிதி முகாமைத்துவ சட்டத்தின்படி, முதன்மை செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதமாகவும், முதன்மை இருப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீதமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய வரம்புகள் 10 நாடுகளில் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. கௌதமாலா, எத்தியோப்பியா, இலங்கை, வெனிசுலா, நைஜீரியா, யேமன், வங்காளதேசம், லெபனான், ஹைட்டி ஆகிய நாடுகளில்தான் இந்த வரம்புகள் செய்யப்பட்டுள்ளன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீத முதன்மை செலவினம் அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதி அல்ல. முதன்மை இருப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீதமாக வைத்திருப்பதும் அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதி அல்ல. இது ஆணையைச் செயல்படுத்துவது அல்ல. இது அரசாங்க ஆணையைக் காட்டிக்கொடுப்பது. அந்த ஆணையை முற்றிலும் அழித்து, சொன்னவற்றை மறந்து, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்கள், இறையாண்மை பிணை ஒப்பந்தங்களுக்கு மிகவும் துன்பகரமான மற்றும் சிரமமான ஒப்பந்தம் அது. அதன் மூலம் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திலிருந்து விலக வேண்டும் என்று கருதவில்லை.

மக்கள் சார்பு, மனிதாபிமான அணுகுமுறையுடன் மக்களின் பக்கம் நின்று சிந்தித்து புதிய பாதையில் செல்ல வாய்ப்பிருந்தது என்றார்.

அமெரிக்கா



பாதுகாப்பு துறையில்

# 5,400 பேர் பணி நீக்கம்

அமெரிக்க பாதுகாப்புத் துறையில் 5,400 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளதாக, ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா நாட்டின் மிகப்பெரிய துறையான இராணுவத்தில் 7 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பணி புரிகின்றனர். அவர்களில் 8 சதவீதம் ஊழியர்களை பணிநீக்கம் செய்ய அந்நாட்டு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன் முதல்கட்டமாக தற்போது 5,400 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய உள்ளதாக, ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இதில் பெரும்பாலானோர் வருடத்துக்கும் குறைவான அனுபவம் கொண்ட தகுதி காண் நிலையில் உள்ளவர்கள் ஆவர். அதேசமயம், இராணுவ வீரர்களுக்கு இந்த பணிநீக்கத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல், வனத்துறையில் இருந்து 2,000 பேரும், உள்நாட்டு வருவாய் சேவைத் துறையில் இருந்து 7,000 பேரும் பணிநீக்கம் செய்யப்பட உள்ளனர்.

இதனிடையே 5,400 ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் ஜனாதிபதி ட்ரம்பின் முடிவுக்கு, அந்நாட்டில் எதிர்ப்பு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரு

வணிக வளாகத்தின் மேற்கூரை

# இடிந்து விழுந்ததில் ஆறு பேர் பலி



தென் அமெரிக்காவில் அமைந்துள்ள பெரு நாட்டில் சனிக்கிழமை(22) இரவு வணிக வளாகம் ஒன்றின் மேற்கூரை இடிந்து விழுந்த சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 78 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பெரு நாட்டின் லா லிபரேட்டட் மாகாணத்தில் அமைந்துள்ள வணிக வளாகத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர், படுகாயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உயிரிழந்தவர்களின் உடல்கள் உடற்கூராய்விற்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. மேலும், இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேல்

# ஹமாஸுக்கு முத்தம் கொடுத்த இஸ்ரேலிய பிணைக் கைதி

காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி, மேலும் 3 இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர். அப்போது பிணைக் கைதி ஒருவர் ஹமாஸ் படையினறின் நெற்றியில் அன்பு முத்தம் கொடுத்து விடைபெற்றுள்ள புகைப்படங்கள் இனையத்தில் வைரலாகி வருகின்றது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதையடுத்து, பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்ற இஸ்ரேலியர்களை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்து வருகின்றனர். பதிலுக்கு நூற்றுக்கணக்கான பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்து வருகிறது.


அண்மையில் அப்படி 3 பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்துள்ளனர்.

அதில் ஒமர் ஷெம் டோவ் என்ற பிணைக் கைதி, ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த இரண்டு பேரின் நெற்றி பகுதியில் முத்தம் கொடுத்து விடைபெற்றுள்ளர்.

விடுவிக்கப்பட்ட மூவருக்கும் சான்று அளிக்கப்பட்டது. அவர்கள் செஞ்சிலுவை சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் மூவரும் 505 நாட்கள் ஹமாஸ் பிடியில் இருந்துள்ளனர்.

ஒமர் மிகவும் மெலிந்து போயுள்ளார். ஆனால், உற்சாகமாக காணப்படுகிறார். சாதாரண மனநிலையை அவர் கொண்டுள்ளார் என அவரது தந்தை கூறியுள்ளார்.

'அதுதான் என் மகன் ஒமர். அவன் அனைவரிடத்திலும் அன்பு செலுத்துவான். அதானல் ஹமாஸின் அன்பையும் பெற்றுள்ளான்' என அவரது தாயார் கூறியுள்ளார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# வெஸ்ட் ஹாமிடம் தோற்ற ஆர்சனல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (22) நடைபெற்ற வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

வெஸ்ட் ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜரோன் பௌவன் பெற்றிருந்தார்.

இந்நிலையில் அஸ்தன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது. வில்லா சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் மார்கோ அஸென்ஸியோ பெற்றதோடு, செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை என்ஸோ பெர்ணாண்டஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை, எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 61 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 53 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 44 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. இதில் பொரெஸ்டும், சிற்றியும் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# இலங்கையை வென்ற இந்தியா

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் இருபதுக்கு - 20 தொடரானது நவி மும்பையில் சனிக்கிழமை(22) ஆரம்பித்த நிலையில் முதலாவது போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் அணியை இந்திய மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இந்தியா: 222/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஸ்டுவர்ட் பின்னி 68 (31), யூசுஃப் பதான் ஆ.இ 56 (22). குர்கிறீட் சிங் 44 (32), யுவ்ராஜ் சிங் ஆ.இ 31 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுரங்க லக்மால் 2/34 [4], சத்துரங்க டி சில்வா 1/24 [3])

இலங்கை: 218/9 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: குமார் சங்கக்கார 51 (30), ஜீவன் மெண்டிஸ் 42 (17), அசேல குணரட்ண 37 (25), லஹிரு திரிமான்ன 24 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: தவால் குல்கர்னி 2/34 [4])



போட்டியின் நாயகன்: ஸ்டுவர்ட் பின்னி.

உத்தரபிரதேசம்

போலி செய்தி பரப்பிய

# 34 சமூக வலைத்தளங்கள் மீது வழக்கு பதிவு

கும்பமேளாவுக்கு வந்த ரயிலில் தீ விபத்து என வதந்தி பரப்பிய குற்றச்சாட்டில் 34 சமூக வலைத்தளங்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மகா கும்பமேளாவையொட்டி பிரயாக்ராஜ் நோக்கி வந்த ரயிலில் தீ விபத்து ஏற்பட்டு 300 பேர் உயிரிழந்ததாக, கடந்த 14ஆம் திகதியன்று சமூகவலைத்தளங்களில் காணொளி பரவியுள்ளது.

இதுதொடர்பாக நடத்திய விசாரணையில், அது பங்களாதேஷில் கடந்த 2022ஆம் ஆண்டு ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் தீப்பிடித்து எரிந்த காணொளி என்பது தெரியவந்தது.

இந்த காணொளியைக் கும்பமேளாவுக்கு வந்த ரயிலில் தீ விபத்து என பொய் செய்தி பரப்பியது கண்டறியப்பட்டது. இதுதொடர்பாக பொலிஸார் 34 சமூகவலைத்தள கணக்குகள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



சம்பியன்ஸ் கிண்ணம்:

# இங்கிலாந்தை வீழ்த்திய அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில், லாகூரில் சனிக்கிழமை (22) நடைபெற்ற இங்கிலாந்துடனான குழு பி போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென தெரிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, பென் டக்கெட்டின் 165 (143), ஜோ றூட்டின் 68 (78) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், பென் டுவார்ஷுயுஸ் 3, அடம் ஸாம்பா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 352 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஜொஷ் இங்லிஸின் ஆட்டமிழக்காமல் 120 (86), அலெக்ஸ் காரியின் 69 (63), மத்தியூ ஷோர்ட்டின் 63 (66), மர்னுஸ் லபுஷைனின் 47 (45), கிளென் மக்ஸ்வெல்லின் ஆட்டமிழக்காத 32 (15) ஓட்டங்களோடு 47.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் அடில் ரஷீட் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இங்லிஸ் தெரிவானார்.

தெலுங்கானா

சுரங்கம் இடிந்து விபத்து:

# 8 தொழிலாளர்களை மீட்கும் பணி தீவிரம்

தெலுங்கானாவில், சுரங்கம் இடிந்து விழுந்த சம்பவத்தில் 8 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.

தெலுங்கானா மாநிலம் - நாகர்கர்னூல் மாவட்டம், அம்ராபாத்தில் ஸ்ரீசைலம் அணை உள்ளது. இந்த அணையில் புதிதாகச் சுரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, அணையில் உள்ள தண்ணீர் குழாயில் கசிவு ஏற்பட்டுள்ளது. இந்த கசிவைச் சரிசெய்வதற்கு, சனிக்கிழமை (22) மாலை தொழிலாளர்கள் 8 பேர் சுரங்கத்துக்குள் சென்றுள்ளனர்.



தொழிலாளர்கள் தங்கள் பணியைச் செய்துகொண்டிருந்தபோது, திடீரென சுரங்கத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த 8 தொழிலாளர்களும் சிக்கிக்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்துத் தகவலறிந்த தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர், பொலிஸார், தீயணைப்புப்படையினர் ஆகியோர் மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# இறுதிப் போட்டியில் விம்பிள்டன்



எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் லெஜன்ட்ஸ் கழக அனுசரணையுடன் புத்தளத்தில் நடைபெற்று வரும் விலகல் முறையிலான தொடரின் இறுதிப் போட்டிக்கு விம்பிள்டன் கழகம் தகுதி பெற்றுள்ளது. மாவட்ட விளையாட்டரங்கில் சனிக்கிழமை (22) நடைபெற்ற கற்பிட்டி பேர்ள்ஸுடனான அரையிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 24, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.